**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண்.449 நாள்: 07.09.2026

**வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, அண்ணாநகர் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, அம்பத்தூர் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள், இன்று (07.09.2026) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அண்ணாநகர் மண்டலம், வார்டு-96க்குட்பட்ட பிரிக்லின் சாலை, வார்டு-103க்குட்பட்ட அண்ணாநகர் 2ஆவது மற்றும் 3ஆவது அவென்யூ, 10ஆவது பிரதான சாலை உள்ளிட்ட இடங்களில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, மத்திய வட்டார துணை ஆணையாளர் அவர்கள், நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது, மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி.**